# கிருமிப்பரவலால் இளையர்கள் மனம் சோர்ந்தனர்: ஆய்வு

***Seithi Mediacorp,*** 14 July 2022

ஈராண்டுகளுக்குமேல் நீடித்த கிருமிப்பரவலால் இளையர்கள், மனநலம் பாதிக்கப்பட்டு சோர்வுக்கு ஆளானதாகக் கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆனால் 60 வயதுக்கு மேற்பட்டோர் அதே காலக்கட்டத்தில் தங்களது மனநலம் மேம்பட்டதாகக் கருத்துக் கூறினர்.

2,000க்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும் பங்கேற்ற இணையக் கருத்துக்கணிப்பில் அந்த விவரங்கள் தெரியவந்தன.

21இல் இருந்து 29 வயது வரையிலான இளையர்கள் கிருமிப்பரவலின்போது தங்கள் மனநலம் குன்றியதாகக் கூறினர்.

வாழ்க்கையின் முன்னுரிமைகளை மறுபரிசீலனை செய்தல், நிச்சயமற்ற வருங்காலத்திற்கு இடையே வாழ்க்கைத் தெரிவு ஆகியவை பற்றி இளையர்களிடையே கேள்விகள் எழுந்தன.

பயணம் செய்ய முடியாமல் இருந்ததும் நண்பர்களைச் சந்திக்க முடியாமல் போனதும் இளையர்களைக் கணிசமாகப் பாதித்திருக்கலாம் என்று கூறப்பட்டது.

கிருமிப்பரவல் தொடங்கியபோது வயதானவர்களில் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர்.

சிலர் மரணமடைந்தனர்.

அது வயதானவர்களின் மனநலத்தைப் பாதித்திருக்கலாம் என ஆய்வு குறிப்பிட்டது.

இருப்பினும் சிகிச்சை வாய்ப்புகள் மேம்பட்டுத் தடுப்புமருந்துகள் கிடைக்கத் தொடங்கியதும் மூத்தோர் நம்பிக்கை பெற்றனர்.